# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்:119/மா/2019**
**ஆணை நாள்: 21-01-2020**

**திரு. எம். விஜயன்,**
**சென்னை 600 081.** --- **முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் - 05,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.** --- **எதிர் மனுதாரர்**

பெருநகர் சென்னை மாநகராட்சி, தண்டையார் பேட்டை, கருணாநிதி நகர், 4-வது தெரு, எண்.3/13, என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் என்பவரது 25/07/2019 நாளிட்ட மனு 26.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.119/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் தனது 25.7.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-05, பகுதி-12, வார்டு-52, மணியக்கார சந்திர சாலையில் பல ஆக்கிரமிப்புகளால் சாலையை பயன்படுத்துவோருக்கு இடையூறாக இருக்கிறதென்றும், குறிப்பாக ஸ்ரீவீராஸ் கலெக்ஷன் கடை எதிரே அனுமதியில்லாமல் உள்ள சாலையோர கடைகள் மற்றும் சாலையோற சிறுகோவில் ஆகியவைகள் சாலை போக்குவரத்திற்கு இடையூறாகவும் பொது மக்கள் நடந்து செல்வதற்கு இடைஞ்சலாகவும் உள்ளன என்றும், சட்டத்திற்கு புறம்பான ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி முறையீடு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 05-வது மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 02.08.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் ஆணையிடப்பட்டது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, 05-வது மண்டல அலுவலக உதவி செயற் பொறியாளர் தனது 17.12.2019 நாளிட்ட அறிக்கையில் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள எம்.சி. சாலை துணிக்கடைகள் நிறைந்த பகுதியாகும் என்றும் அப்பகுதியில் அமைந்துள்ள சாலையோர ஆக்கிரமிப்பு கடைகளை அவ்வப்போது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பெருநகர சென்னை காவல் துறையும் இணைந்து அகற்றி வருகிறது என்றும், கடந்து 12.6.2019 மற்றும் 13.12.2019 ஆகிய தேதிகளில் கோட்டம் 52க்குட்பட்ட எம்.சி. சாலையில், சாலையோற வியாபாரிகளின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என்றும், இப்புகாரில் கூறப்பட்டுள்ள சிறு கோவிலுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் உரிய தாக்கீது (222) 12.12.2019 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 24.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, முறையீட்டு மனுதாரர் 17.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5, பகுதி 12, வார்டு 52ல் ஆக்கிரமிப்புகள் அதிகம் உள்ளது என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றினாலும் மறுபடியும் ஆக்கிரமிப்புகள் தொடருகின்றன என்றும், இச்சாலையில் உள்ள ஸ்ரீ வீராஸ் கலெக்ஷன் கடை எதிரே, (மணியக்கார சந்தர சாலை, M.C. ரோடு) அதாவது பெருநகர சென்னை மாநகராட்சி நடைபாதை வியாபாரிகள் வணிக வளாகம் முதல் நான்கு வழி சாலை வரையில் உள்ள அனுமதி பெறாமல் உள்ள் சாலை ஒர நடைபாதை கடைகளும் மற்றுமொரு அம்மன் கோவில் ஆகியவைகள் சாலை போக்குவரத்திற்கும், நடந்து செல்வோருக்கும் பெரும் இடஞ்சலாக உள்ளது என்றும், சாலையின் இருபுறமும் கடைகள் ஆக்கிரமித்து ஒரு ஆட்டோ செல்லும் பாதை மட்டும் உள்ளது என்றும், சென்னை மாநகராட்சி 5-வது மண்டல அலுவலருக்கு 14.5.2019 அன்று ஒரு எழுத்துபூர்வமான புகார் கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பியிருந்தேன் என்றும், இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை என்றும், முற்றிலும் ஆக்கிரமிப்பால் சூழப்பட்டிருக்கும் இந்த சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய ஆணையிடுமாறு தெரிவித்தார். முறையீட்டு மனுதாரர் சாட்சியாக குறிப்பிட்டுள்ள திரு. A. சதீஷ்குமார் அளித்த வாக்குமூலத்தில் தான் ,கிராம்டன் சர்வீஸ் சென்டரில் மேனேஜராக பணிபுரிவதாகவும் தான் அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை செல்வது வழக்கம் என்றும், நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் உரிய இடத்திற்குபோய் சேருவது கஷ்டமாக உள்ளது என்றும், மனுதாரர் எனக்கு தெரிந்தவர் தான் என்றும், மனுவில் அவர் கூறியிருப்பதெல்லாம் உண்மைதான் என்றும், ஆம்புலன்ஸ் செல்வதற்கே வழியில்லாமல் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின்படி 17.12.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, 5-வது மண்டல உதவி செயற் பொறியாளர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பகுதி தன்னுடைய கட்டுப்பாட்டில் வருவதாகவும், அவ்வப்பொழுது காவல் துறையுடன் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி வருவதாகவும் 12.6.2019 மற்றும் 13.10.2019 ஆகிய தேதிகளில் காலை 10.00 மணியளவில் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்றும், திரும்பவும் ஆக்கிரமிப்புகள் வந்து விடுகிறது என்றும், மீண்டும் காவல் துறையினருடன் இணைந்து நிரந்தரமாக ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறோம்

என்றும், நடைபாதையில் மிக சிறிய அளவில் சிறிய கோவில் உள்ளது என்றும், அக்கோவிலை அகற்றுவதற்கு உரிய தாக்கீது (222) வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சி 5-வது மண்டல அலுவலக உதவி செயற் பொறியாளர் அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டிருந்த சாட்சி அளித்த வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 5-வது மண்டல உதவி செயற் பெறியாளர் அளித்த வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி 5-வது மண்டல உதவி செயற் பொறியாளரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தபடி முறையீட்டு மனுவில் குறிப்பிட்டிருந்த சாலையோர நடைபாதை ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி 05-மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 21-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

(1) திரு. எம். விஜயன்,
எண்.3/13, 4-வது தெரு,
கருணாநிதி நகர்,
தண்டையார் பேட்டை,
சென்னை 600 081.

(2) மண்டல அலுவலர்,
மண்டலம் - 05,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.62, பேசின் பிரிட்ஜ் ரோடு,
பழைய வண்ணாரபேட்டை, சென்னை – 600 021.

(3) உதவி செயற் பொறியாளர், பகுதி –12, மண்டலம் 5
பெருநகர சென்னை மாநகராட்சி, பேரம்பாலு (செ) தெரு,
சென்னை – 600 021.

<u>நகல்</u>

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி